255

23 FEB 2017

05945

சுருக்கம்

வேளாண்மைத்துறை – வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகம்– திருவண்ணாமலை விற்பனைக்குழுவின் கீழ் திருவண்ணாமலை மாவட்டம், கலசப்பாக்கம் வட்டம், ஆதமங்கலம் புதூர் கிராமத்தில் புதியதாக தோற்றுவிக்கப்பட்டுள்ள ஆதமங்கலம் புதூர் ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்திற்கான விற்பனைப் பகுதிகள் குறித்து 1987–ம் வருடத்திய தமிழ்நாடு வேளாண் விளைபொருள் வாணிபச் (முறைப்படுத்துதல்) சட்டத்தின் சட்டப்பிரிவு 9 (1) (a) மற்றும் சட்டப் பிரிவு 6 (2) ன்படி அறிவிக்கைகள் வெளியிடப்படுகிறது.

---

வேளாண்மைத் (வேவி2.(1) துறை

அரசாணை (நிலை) எண்.28 நாள்: 07.02.2017

திருவள்ளுவர் ஆண்டு 2048,
தைத் திங்கள் 25–ஆம் நாள்

படிக்கப்பட்டவை:–

1. அரசாணை (நிலை) எண்.168, வேளாண்மைத் (வே.வி.2) துறை, நாள் 15.04.1997.
2. அரசாணை (நிலை) எண். 198, வேளாண்மைத் (வே.வி.2) துறை, நாள்09.12.2014.
3. வேளாண்மை விற்பனை (ம) வேளாண் வணிக ஆணையரின் கடித எண். விகுதி2/15442/ 2014, நாள் 05.02.2015, 30.07.2016 மற்றும் 12.09.2016.

•••••

ஆணை:–

மேலே ஒன்றில் படிக்கப்பட்ட அரசாணையில், ஒருங்கிணைந்த வடஆற்காடு விற்பனைக்குழுவினை இரண்டாகப் பிரித்து, 21.04.1997 முதல் திருவண்ணாமலை மாவட்டத்திற்கென தனி விற்பனைக்குழு தோற்றுவித்து ஆணையிடப்பட்டுள்ளது.

2. மேலே இரண்டில் படிக்கப்பட்ட அரசாணையில், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால், சட்டமன்ற பேரவை விதி 110–ன் கீழ், 07.08.2014 அன்று செய்யப்பட்ட அறிவிப்பின்படி, 1987–ம் வருடத்திய தமிழ்நாடு வேளாண் விளைபொருள் வாணிபச் (முறைப்படுத்துதல்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 27/1989) சட்டப் பிரிவு 6 (1)–ன் கீழ் நெல், முழு அல்லது உடைக்கப்பட்ட வேர்கடலை (தோலுடன் கூடியது மற்றும் தோல் நீங்கிய பருப்புகள்), மிளகாய் அல்லது சிவப்பு மிளகாய், நல்லெண்ணெய் விதை அல்லது பேய் எள் அல்லது எள், அனைத்துவகை கரும்புவெல்லம் (வெல்லப்பொடி, பழுப்பு சர்க்கரை, இதரவைகள்), எல்லா வடிவங்களிலுள்ள கம்பு (Bajra), எல்லா வடிவங்களிலுள்ள சோளம் (Jowar) எல்லா வடிவங்களிலுள்ள ராகி, இளநீர் நீங்கலான

தேங்காய் அனைத்து வகை, பருத்தி (கப்பாஸ், லிண்ட், கழிவு), அனைத்து வகை புளி, எல்லா வடிவங்களிலுமுள்ள துவரை, வரகு, ஆமணக்கு (தோலோடு உள்ள மற்றும் தோல் நீக்கப்பட்ட) மற்றும் எல்லா வடிவங்களிலுமுள்ள கொள்ளு முதலான விளைபொருட்களின் விற்பனையை முறைப்படுத்துவதற்குரிய வசதிகள் ஏற்படுத்துவதற்கு திருவண்ணாமலை விற்பனைக்குழுவின் கீழ், திருவண்ணாமலை மாவட்டம், கலசப்பாக்கம் வட்டம், ஆதமங்கலம் புதூர் கிராமத்தில் ஓர் ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தினை தோற்றுவிக்க பணித்து ஆணை வெளியிடப்பட்டுள்ளது. மேலும் 1987–ம் வருடத்திய தமிழ்நாடு வேளாண் விளைபொருள் வாணிபச் (முறைப்படுத்துதல்) சட்டத்தின் சட்டப் பிரிவு 6 (2)–ன்படி விற்பனைப் பகுதிகள் குறித்த அறிவிக்கை வெளியிடும் கருத்துருவினை மேற்படி அரசாணையின் அடிப்படையில் அனுப்பிவைக்குமாறு வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிக இயக்குநருக்கு அறிவுறுத்தப்பட்டது.

3. மேலே மூன்றில் படிக்கப்பட்ட கடிதங்களில், வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிக இயக்குநர், திருவண்ணாமலை விற்பனைக்குழுவின் கீழ், திருவண்ணாமலை மாவட்டம், கலசப்பாக்கம் வட்டம், ஆதமங்கலம் புதூர் கிராமத்தில் புதியதாக தோற்றுவிக்க பணிக்கப்பட்டுள்ள ஒழுங்குமுறை விற்பனைக்கூடத்திற்கு அறிவிக்கையிடப்பட்ட அங்காடிப் பகுதிகளை அறிவிக்கை செய்யும் பொருட்டு, போளூர் ஒழுங்குமுறை விற்பனைக்கூடத்தின் அறிவிக்கையிடப்பட்ட அங்காடி பகுதிகளாக உள்ள 38 கிராமங்கள் மற்றும் புதுப்பாளையம் ஒழுங்குமுறை விற்பனைக்கூடத்தின் அறிவிக்கையிடப்பட்ட அங்காடிப் பகுதிகளாக உள்ள 3 கிராமங்கள் ஆகியவற்றை, 1987–ஆம் ஆண்டைய தமிழ்நாடு வேளாண் விளைபொருள் வாணிபச் (முறைப்படுத்துதல்) சட்டத்தின் 9–ஆம் பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவின் (a) பகுதியில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களை கொண்டும், இதுநாள் வரையில் எந்த ஓர் ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்திலும் அறிவிக்கை செய்யப்படாத 11 கிராமங்கள் அடங்கிய பகுதிகளையும், மேற்படி சட்டத்தின் 6(2)–ஆம் பிரிவில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களை கொண்டும், அறிவிக்கை செய்து ஆணை வழங்கிடக் கேட்டுக்கொண்டுள்ளார்.

4. வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிக இயக்குநரின் கருத்துருவினை அரசு கவனமுடன் பரிசீலித்து, அதனை ஏற்று, திருவண்ணாமலை மாவட்டம், கலசப்பாக்கம் வட்டம், ஆதமங்கலம் புதூர் கிராமத்தில் புதியதாக தோற்றுவிக்க பணிக்கப்பட்டுள்ள ஒழுங்குமுறை விற்பனைக்கூடத்திற்கு அறிவிக்கையிடப்பட்ட அங்காடிப் பகுதிகளை நிர்ணயம் செய்யும் பொருட்டு, போளூர் ஒழுங்குமுறை விற்பனைக்கூடத்தின் அறிவிக்கையிடப்பட்ட அங்காடி பகுதிகளிலிருந்து 38 கிராமங்களையும், புதுப்பாளையம் ஒழுங்குமுறை விற்பனைக்கூடத்தின் அறிவிக்கையிடப்பட்ட அங்காடிப் பகுதிகளிலிருந்து 3 கிராமங்களையும் ஆக 41 கிராமங்களை 1987–ஆம் ஆண்டைய தமிழ்நாடு வேளாண் விளைபொருள் வாணிபச் (முறைப்படுத்துதல்) சட்டத்தின் 9–ஆம் பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவின் (a) பகுதியில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களை கொண்டும், இது நாள் வரை அறிவிக்கையிடப்படாத 11 கிராமங்கள் அடங்கிய பகுதிகளை 1987–ஆம் ஆண்டைய தமிழ்நாடு வேளாண் விளைபொருள் வாணிபச் (முறைப்படுத்துதல்) சட்டத்தின் 6(2)–ஆம் பிரிவில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களை கொண்டும், இவ்வாணையின் இணைப்புகளில் கண்டவாறு, அறிவிக்கை செய்து ஆணையிடுகிறது.

இவ்வரசாணையின் இணைப்பிலுள்ள அறிவிக்கைகள் ஆங்கிலத்திலும், தமிழிலும் தமிழ்நாடு அரசிதழில் வெளியிடப்படும். அவ்வாறு தமிழ்நாடு அரசிதழில் வெளியான ஒரு மாத காலத்திற்குள் திருவண்ணாமலை மாவட்ட அரசிதழிலும் அந்த அறிவிக்கைகள் வெளியிடப்படும்.

5. அரசு மத்திய அச்சக பணி மேலாளர், தமிழ்நாடு அரசிதழில் வெளியிடப்பட்ட இவ்வறிக்கைகளின் நான்கு நகல்களை, செய்தி மற்றும் மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை–9 அவர்களுக்கும் மற்றும் ஒரு நகலை விருத்தாச்சலம் அரசினர் கிளை அச்சக, உதவிப் பணிமேலாளருக்கும் அனுப்பிவைக்கும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறார். இவ்வறிவிக்கைகள் தமிழ்நாடு அரசிதழில் வெளியான ஒரு மாத காலத்திற்குள், திருவண்ணாமலை மாவட்டத்தில் அதிகப் புழக்கத்தில் உள்ள இரு தமிழ் நாளேடுகளில் அவற்றினை பிரசுரம் செய்யும்படி செய்தி மற்றும் மக்கள் தொடர்பு இயக்குநர் கேட்டுக்கொள்ளப்படுகிறார். இவ்வறிவிக்கைகள் திருவண்ணாமலை மாவட்டத்தில் இரு தமிழ் நாளேடுகளில் பிரசுரிப்பதை உறுதி செய்துகொள்ளுமாறும், அவ்வாறு வெளியான இரு தமிழ் நாளேடுகளின் நகல்களை அரசுக்கு அனுப்பிவைக்கும்படியும் திருவண்ணாமலை விற்பனைக்குழு செயலாளர், கேட்டுக்கொள்ளப்படுகிறார். இவ்வறிவிக்கைகளை திருவண்ணாமலை மாவட்டத்தில் இரு தமிழ் நாளேடுகளில் வெளியிடுவதற்காகும் செலவினச் சீட்டை திருவண்ணாமலை விற்பனைக்குழு செயலாளருக்கு நேரடியாக செய்தி மற்றும் மக்கள் தொடர்பு இயக்குநர் அனுப்பிவைக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

6. அரசு மத்திய அச்சக பணி மேலாளர், சென்னை 600 079 மற்றும் உதவி பணி மேலாளர், அரசினர் கிளை அச்சகம், விருத்தாசலம் ஆகியோர் முறையே, அறிவிக்கை வெளியிடப்பட்ட தமிழ்நாடு அரசிதழ் மற்றும் திருவண்ணாமலை மாவட்ட அரசிதழ் ஆகியவற்றின் இரு நகல்களை அரசுக்கு (வேளாண்மை (வேவி2) துறை) அனுப்பி வைக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

(ஆளுநரின் ஆணைப்படி)

ககன்தீப் சிங் பேடி
வேளாண்மை உற்பத்தி ஆணையர்
மற்றும் அரசு முதன்மைச் செயலாளர்.

பெறுநர்
வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிக ஆணையர்,
சென்னை–32.
உதவி பணி மேலாளர், அரசினர் கிளை அச்சகம், விருத்தாசலம்.
இயக்குநர், செய்தி மற்றும் மக்கள் தொடர்பு, சென்னை–9. (4 நகல்கள்)
பணி மேலாளர், அரசு மத்திய அச்சகம், சென்னை–600 079.
தலைமைச் செயல் அலுவலர், தமிழ்நாடு மாநில வேளாண்மை விற்பனை வாரியம், சென்னை–32.
செயலாளர், திருவண்ணாமலை விற்பனைக்குழு (வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிக ஆணையர், சென்னை – 32 மூலமாக).
மாவட்ட ஆட்சியர், திருவண்ணாமலை

இயக்குநர், உள்ளாட்சி நிதி தணிக்கைத் துறை, சென்னை–108.
உறைவிட தணிக்கை அலுவலர், முதன்மை மாநில கணக்காயர் (பொது மற்றும் சமூகப் பிரிவு தணிக்கை) அலுவலகம், தலைமைச்செயலகம், சென்னை –9.

நகல் :–

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களின் சிறப்புநேர்முக உதவியாளர், சென்னை–9.
வேளாண்மை உற்பத்தி ஆணையர் மற்றும் அரசு முதன்மைச் செயலாளரின் நேர்முக உதவியாளர், சென்னை–9.
சட்டத்துறை, சென்னை–9.
வேளாண்மை (வேவி1/வேவி3) துறை, சென்னை–9
வேளாண்மை (அநமு3) துறை,சென்னை–9 (அட்டவணைப்படுத்தும் வகைக்கு)
இருப்புக் கோப்பு / உதிரி.

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

பிரிவு அலுவலர். 13/2/17

259 -

## அறிவிக்கை –I

1987–ஆம் வருடத்திய தமிழ்நாடு வேளாண் விளைபொருள் வாணிபச் (முறைப்படுத்துதல்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 27/1989) 9–ஆம் பிரிவைச் சேர்ந்த உட்பிரிவு (1) (a) பகுதியில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டு, தமிழ்நாடு ஆளுநர் அவர்கள், கீழே கலம் 2–ல் குறிப்பிடப்பட்டுள்ள பகுதிகளை, கலம் 3–ல் குறிப்பிடப்பட்டுள்ள அறிவிக்கையிடப்பட்ட அங்காடிப் பகுதிகளில் இருந்து நீக்கி, அவ்வாறு நீக்கப்பட்ட பகுதிகளை ஆதமங்கலம் புதூர் விற்பனைக்கூடத்தின் அறிவிக்கையிடப்பட்ட அங்காடிப் பகுதிகளாக சேர்த்து, 07.02.2017 அந்நாள் முதற்கொண்டு இதன்மூலம் விளம்புகை செய்கிறார்:–

## அட்டவணை

| வ. எண். | பகுதிகளின் பெயர் | எந்த அறிவிக்கை இடப்பட்ட அங்காடிப் பகுதியிலிருந்து நீக்கப்படுகிறது |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 1. | வன்னியனூர் | போளூர் |
| 2. | காப்பலூர் | போளூர் |
| 3. | விண்ணுவாம்பட்டு | போளூர் |
| 4. | கலசப்பாக்கம் | போளூர் |
| 5. | பூண்டி | போளூர் |
| 6. | கீழ்பொத்தரை | போளூர் |
| 7. | தென்னகரம் | போளூர் |
| 8. | பழங்கோயில் | போளூர் |
| 9. | பில்லூார் | போளூர் |
| 10. | தென்பள்ளிப்பட்டு | போளூர் |
| 11. | காலூார் | போளூர் |
| 12. | பத்தியவாடி | போளூர் |
| 13 | அணியாலை | போளூர் |
| 14 | கெங்கநல்லூார் | போளூர் |
| 15 | லாடவரம் | போளூர் |
| 16 | சீட்டம்பட்டு | போளூர் |
| 17 | படியம்புத்தூார் | போளூர் |
| 18 | பாடகம் | போளூர் |
| 19. | அலங்காரமங்கலம் | போளூர் |
| 20 | காம்பட்டு | போளூர் |
| 21 | ஆனைவாடி | போளூர் |
| 22 | அருணகிரிமங்கலம் | போளூர் |
| 23 | தென்மாதிமங்கலம் | போளூர் |
| 24 | பானாம்பட்டு | போளூர் |

| | | |
|---|---|---|
| 25 | எர்ணாமங்கலம் | போளூர் |
| 26 | மேலாரணி | போளூர் |
| 27 | சேங்கபுத்தேரி | போளூர் |
| 28 | மேல்வில்வராயநல்லூர் | போளூர் |
| 29 | கச்சேரிமங்கலம் | போளூர் |
| 30 | எலத்தூர் | போளூர் |
| 31 | சோழபுரம் | போளூர் |
| 32 | கெங்கவரம் | போளூர் |
| 33 | ஆதமங்கலம் | போளூர் |
| 34 | தேவராயன் பாளையம் | போளூர் |
| 35 | மேல்சோழங்குப்பம் | போளூர் |
| 36 | கெங்கலமகாதேவி | போளூர் |
| 37 | சிறுவள்ளூர் | போளூர் |
| 38 | கேட்டவரம்பாளையம் | போளூர் |
| 39 | கீழ்பாலூர் | புதுப்பாளையம் |
| 40 | மேல்பாலூர் | புதுப்பாளையம் |
| 41 | கடலாடி | புதுப்பாளையம் |

ககன்தீப் சிங் பேடி
வேளாண்மை உற்பத்தி ஆணையர்
மற்றும் அரசு முதன்மைச் செயலாளர்.

/உண்மை நகல்/

பிரிவு அலுவலர் 13/2/17

## அறிவிக்கை –II

1987–ஆம் வருடத்திய தமிழ்நாடு வேளாண் விளைபொருள் வாணிபச் (முறைப்படுத்துதல்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 27/1989) 6–ஆம் பிரிவைச் சார்ந்த உட்பிரிவு (2)–இல் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டு, தமிழ்நாடு ஆளுநர் அவர்கள், கீழே கலம் 1–இல் குறிப்பிடப்பட்டுள்ள திருவண்ணாமலை விற்பனைக் குழுவிற்குட்பட்ட ஆதமங்கலம் புதூர் விற்பனைக்கூடத்தின் பரப்பினையும் மற்றும் கலம் 2–இல் குறிப்பிடப்பட்டுள்ள ஆதமங்கலம் புதூர் விற்பனைக் கூடத்தினை சுற்றியுள்ள பகுதிகளையும், அனைத்து வகையான அறிவிக்கையிடப்பட்ட வேளாண் விளைபொருட்களைப் பொருத்தமட்டில் மேற்சொன்ன சட்டத்தின் நோக்கங்களுக்காக அறிவிக்கையிடப்பட்ட அங்காடிப் பகுதிகளாக இதன்மூலம் அறிவிக்கிறார்:–

### அட்டவணை

| ஆதமங்கலம் புதூர் விற்பனைக்கூட பகுதி | விற்பனைக் கூடத்தினை சுற்றியுள்ள பகுதிகள் | |
|---|---|---|
| (1) | (2) | |
| | 1. | வன்னியனூர் |
| | 2. | காப்பலூர் |
| | 3. | விண்ணுவாம்பட்டு |
| | 4. | கலசப்பாக்கம் |
| | 5. | பூண்டி |
| | 6. | கீழ்பொத்தரை |
| | 7. | தென்னகரம் |
| | 8. | பழங்கோயில் |
| | 9. | பில்லூர் |
| | 10. | தென்பள்ளிப்பட்டு |
| | 11. | காலூர் |
| | 12. | பத்தியவாடி |
| | 13 | அணியாலை |
| | 14 | கெங்கநல்லூர் |
| | 15 | லாடவரம் |
| | 16 | சீட்டம்பட்டு |
| | 17 | படியம்புத்தூர் |
| | 18 | பாடகம் |
| | 19. | அலங்காரமங்கலம் |
| | 20 | காம்பட்டு |
| | 21 | ஆனைவாடி |
| | 22 | அருணகிரிமங்கலம் |
| | 23 | தென்மாதிமங்கலம் |
| | 24 | பானாம்பட்டு |
| | 25 | எர்ணாமங்கலம் |

| | | |
|---|---|---|
| | 26 | மேலாரணி |
| | 27 | சேங்கபுத்தேரி |
| | 28 | மேல்வில்வராயநல்லூர் |
| | 29 | கச்சேரிமங்கலம் |
| | 30 | எலத்தூர் |
| | 31 | சோழபுரம் |
| | 32 | கெங்கவரம் |
| | 33 | ஆதமங்கலம் |
| | 34 | தேவராயன் பாளையம் |
| | 35 | மேல்சோழங்குப்பம் |
| | 36 | கெங்கலமகாதேவி |
| | 37 | சிறுவள்ளூர் |
| | 38 | கேட்டவரம்பாளையம் |
| | 39 | கீழ்பாலூர் |
| | 40 | மேல்பாலூர் |
| | 41 | கடலாடி |
| | 42 | பிராயம்பட்டு |
| | 43 | மட்டவெட்டு |
| | 44 | காந்தபாளையம் |
| | 45 | சீனந்தல் |
| | 46 | வடகரைநம்மியந்தல் |
| | 47 | வீரளூர் |
| | 48 | எருமையனூர் |
| | 49 | கீழ்தட்டியாப்பட்டு |
| | 50 | நல்லான்பிள்ளைபெற்றாள் |
| | 51 | கிடாம்பாளையம் |
| | 52 | கோவிலூர் |

ககன்தீப் சிங் பேடி
வேளாண்மை உற்பத்தி ஆணையர்
மற்றும் அரசு முதன்மைச் செயலாளர்.

/உண்மை நகல்/

பிரிவு அலுவலர் 13/2/17

263 -

## NOTIFICATION-I

In exercise of the powers conferred by clause (a) of sub-section (1) of section 9 of the Tamil Nadu Agricultural Produce Marketing (Regulation) Act, 1987 (Tamil Nadu Act 27 of 1989), the Governor of Tamil Nadu hereby excludes the areas specified in column (2) from the notified market areas specified in column (3) of the Table below, so as to include, the said areas into the proposed notified market area of Adamangalam Pudur with effect on and from 07.02.2017:-

**THE TABLE**

| S. No | Name of the areas | Excluded from the notified market areas |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 1. | Vanniyanoor | Polur |
| 2. | Kappalore | Polur |
| 3. | Vinnuvambattu | Polur |
| 4. | Kalasapakkam | Polur |
| 5. | Poondi | Polur |
| 6. | Kilpathurai | Polur |
| 7. | Thenagaram | Polur |
| 8. | Pazankoil | Polur |
| 9. | Pillur | Polur |
| 10. | Thenpallipattu | Polur |
| 11. | Kaloor | Polur |
| 12. | Pathiyavady | Polur |
| 13. | Aniyalai | Polur |
| 14. | Genganellur | Polur |
| 15. | Ladavaram | Polur |
| 16. | Sittampattu | Polur |
| 17. | Padiyamputhur | Polur |
| 18. | Padagam | Polur |
| 19. | Alangaramangalam | Polur |
| 20. | Kampattu | Polur |
| 21. | Anaivady | Polur |
| 22. | Arunagirimangalam | Polur |
| 23. | Thenmathimangalam | Polur |
| 24. | Banampattu | Polur |
| 25. | Eranamangalam | Polur |
| 26. | Melarani | Polur |
| 27. | Sengaputheri | Polur |
| 28. | Melvilvarayanallur | Polur |
| 29. | Kacherimangalam | Polur |
| 30. | Elathoor | Polur |

| | | |
|---|---|---|
| 31. | Sozavaram | Polur |
| 32. | Gengavaram | Polur |
| 33. | Adhamangalam | Polur |
| 34. | Devarayampalayam | Polur |
| 35. | Melsozhankuppam | Polur |
| 36. | Gengalamagadevi | Polur |
| 37. | Siruvallur | Polur |
| 38. | Kettavarampalayam | Polur |
| 39. | Kilpaloor | Pudupalayam |
| 40. | Melpaloor | Pudupalayam |
| 41. | Kadaladi | Pudupalayam |

Gagandeep Singh Bedi
Agricultural Production Commissioner
and Principal Secretary to Government

/True Copy/

13/2/17
Section Officer

265-

## NOTIFICATION-II

In exercise of the powers conferred by sub-section (2) of section 6 of the Tamil Nadu Agricultural Produce Marketing (Regulation) Act, 1987 (Tamil Nadu Act 27 of 1989), the Governor of Tamil Nadu hereby declares the area of Adhamangalam Pudur Market under the Tiruvannamalai Market Committee specified in column (1) of the Table below and the areas around the Adhamangalam Pudur Market comprising of the areas specified in the corresponding entries in column (2) thereof, to be the notified market areas for the purposes of the said Act, in respect of all notified agricultural produce:-

### THE TABLE

| Adhamangalam Pudur Market Areas | Areas around the market |
|---|---|
| (1) | (2) |
| | 1. Vanniyanoor |
| | 2. Kappalore |
| | 3. Vinnuvambattu |
| | 4. Kalasapakkam |
| | 5. Poondi |
| | 6. Kilpathurai |
| | 7. Thenagaram |
| | 8. Pazankoil |
| | 9. Pillur |
| | 10. Thenpallipattu |
| | 11. Kaloor |
| | 12. Pathiyavady |
| | 13. Aniyalai |
| | 14. Genganellur |
| | 15. Ladavaram |
| | 16. Sittampattu |
| | 17. Padiyamputhur |
| | 18. Padagam |
| | 19. Alangaramangalam |
| | 20. Kampattu |
| | 21. Anaivady |
| | 22. Arunagirimangalam |
| | 23. Thenmathimangalam |
| | 24. Banampattu |
| | 25. Eranamangalam |
| | 26. Melarani |
| | 27. Sengaputheri |
| | 28. Melvilvarayanallur |
| | 29. Kacherimangalam |

| | |
|---|---|
| | 30. Elathoor |
| | 31. Sozavaram |
| | 32. Gengavaram |
| | 33. Adhamangalam |
| | 34. Devarayampalayam |
| | 35. Melsozhankuppam |
| | 36. Gengalamagadevi |
| | 37. Siruvallur |
| | 38. Kettavarampalayam |
| | 39. Kilpaloor |
| | 40. Melpaloor |
| | 41. Kadaladi |
| | 42. Pirayampattu |
| | 43. Mattavettu |
| | 44. Kanthapalayam |
| | 45. Senandal |
| | 46. Vadakarainammiyanthal |
| | 47. Veeralur |
| | 48. Erumaiyanur |
| | 49. Kilthatiyapattu |
| | 50. Nallanpillaipetral |
| | 51. Kidampalayam |
| | 52. Kovilur |

Gagandeep Singh Bedi
Agricultural Production Commissioner
and Principal Secretary to Government

/True Copy/

Section Officer 3/7/17